# பாலசந்திரன்

# BALACHANDRAN,

வாரத்திற்கு ஒரு முறை

சனிவாரந்தோறும் பிரசுரஞ்செய்யப்படும்.

புத்தகம்-1. | கொழும்பு, 1910-ம் ஆு ஒக்டோபர் மீ 21-ந்உ வெள்ளிக் கிழமை | இலக்கம்-1

உ

திருச்சிற்றம்பலம்.

—✕—

வானிலவும் பான்மதியை வைத்தசடை வானுதலும்
பானிலவு மோர்கோடும் பற்றிடுவே—ருனிலவு
மெம்பெருமா னம்பிகையோ டேரம்ப மூர்த்திகந்தன்
றம்பதுமத் தாளே தலை.

## பால சந்திரன்.

(1) கொழும்பு, செக்கடித்தெரு 103ம் இலக்க வீட்டில் "குகதாச" அச்சியந்திரசாலை தாபிக்கப்பட்டிருக்கின்றது.

(2) இவ் வியந்திரத்திலே "பாலசந்திரன்" என்னும் இப் பத்திரிகை சனி வாரந்தோறும் பிரகடனம் செய்யப்பெறும்.

(3) கல்வி, அரசியல், வழக்கு, வியாபாரம், வேளாண்மை முதலியவைகளும், அவ்வவ்வூரிலே நடக்கும் முக்கிய சம்பவங்களும் விசேஷமாக இப்பத்திரிகையிற் பேசப்படும்.

(4) மனு நிந்தனை மத நிந்தனை முதலிய, துர் விஷயங்கள் ஒருபோதும் இடம்பெறு.

## பத்திரிகைக் கிரயம்,

| | |
|---|---|
| கொழும்புக்கு வரு ஒன்றுக்கு | ரூ.3-00. |
| இலங்கையின் பிற விடங்களுக்கும் இந்தியாவுக்கும் ரூபா | ,, 4-00 |
| சிங்கப்பூர் முதலியஇடங்களுக்கு | ,5-00 |
| தனிப் பிரதி | 0-10 |

இப்பத்திரிகை எடுப்பவர்கள் தாமெடுக்குங்காலத்துப் பணத்தை முன்னேறக் கொடுத்தல்வேண்டும். அப்படிக்கொடாதொழியின், வருஷமொன்றுக்கு ரூபா 1-25 விகிதங்கூட்டிக்கொடுத்தல்வேண்டும்.

இப்பத்திரிகையிற் பிரசுரஞ்செய்யப்படவேண்டிய கடிதங்கள் மாத்திரம் பத்திராதிபருக்கெனவும், இப்பத்திரிகைக்குரிய பிறகடிதங்கள், பணம் முதலியவைஇவ்வச்சியந்திரசாலைக்குஅதிபராகிய

மு. வே. பொன்னம்பலபிள்ளை
'குகதாச அச்சியந்திரசாலை'
,, 103-. செக்கடித்தெரு
,, கொழும்பு

எனவும் விலாசமிட்டனுப்பப்படல வேண்டும்.

பத்திரிகை யெடுக்க விரும்புவோர் பத்திராதிபரிடம் எழுத்து மூலமாகக் கேட்டுக்கொள்ளல் வேண்டும். தாங் கொடுக்கவேண்டிய நிலுவைகளைத்தீர்த்துப் பத்திரிகை வேண்டாமென்று எழுத்துமூலமாகத் தெரிவிக்கும் வரைக்கும் பத்திரிகை அனுப்பப்படும்.

## விளம்பரங்களுக்குச் செலவு.

| | | |
|---|---|---|
| பத்து வரிக்குள் ஒவ்வொரு வரிக்கு | சதம் | 10. |
| பத்துக்குமேல் ஒவ்வொருவரிக்கும் | | 8. |
| பந்தி ஒன்றுக்கு | ரூபா | 5—00. |
| அரைப் பந்திக்கு | ரூபா | 3—50. |
| கால் பந்திக்கு | ரூபா | 2—50. |
| சுருக்கமானசனனமரண விவாக விளம்பரங்கள் | ரூபா | 0—50 |

பெரிய எழுத்திலே பதிப்பிக்க வேண்டிய விளம்பரங்களுக்கும் ஒரு முறையேயன்றிப் பலமுறை வெளிப்படுத்தப்படும் விளம்பரங் களுக்கும் இங்கிலீசிற் பதிப்பிக்கப்படும் விளம்பரங்களும் செலவை, அதிபரை நேரிற் கண்டு ஒழுங்கு செய்துகொள்ளல் வேண்டும்.

## கடித விதானங்கள்.

(1) கடித கர்த்தர்கள் தாம் எழுதக்குறித்த விஷயங்களை நல்ல வெள்ளைக்காகிதத்தில் ஒருபுறத்தில் மசியினுல வரிகள் நெருங்காது அட்சரங்கள் வெவ்வேருய்ப் புலப்படும்படி திருத்தமாக எழுதல வேண்டும்.

(2) வாசிப்பவர்களுக்கு அறிவையும் மகிழ்ச்சியையும் வியப்பையும் தரத்தக்க நற்கருமங்களையே கடிதங்களில அமைத்தெழுதல வேண்டும்.

(3) பயனில்லாத சொற்ருெடர்களையும் தூஷணங்கள்பொதிந்த சொற்ருெடர்களையும், கடிதத்தி லெழுதலாகாது

(4) பொருள் இனிது விளங்கும்படி வாக்கியங்களை இயன்றமட்டும் சுருக்கி யெழுதல்வேண்டும்.

(5) வாக்கியங்கள் தொடர்ப்பட்டு நீளவிடாமல் அணிமையில் வினைமுற்றுக்கொடுத்துச் சிறுச்சிறு வாக்கியங்களாக எழுதல்மிகநன்று

(6) கடிதகர்த்தர் தமது சுய ஊர் பெயர் விலாசம் முதலியவை பத்திரிகாசிரியர்க்குப் புலப்படும்படி தம் கடிதத்தில் குறித்தல்வேண்டும்.

(7) பத்திரிகையில் பிரசுரிக்கத்தகாதனவென்று காணப்படுங்கடிதங்கள் கடிதகர்த்தர்களுக்குத் திருப்பி யனுப்பப்படா. கடிதங்களிலுள்ள கடுஞ்சொற்களும் தீப்பொருள்களும் பரிகரிக்கப் படும். கடிதகர்த்தர்களுடைய அபிப்பிராயங்கள் பத்திரிகாசிரியரைச்சாரமாட்டா.

## குகதாச அச்சியந்திரசாலை.

—✕—

இவ்வச்சுக்கூடத்திலே தமிழில் புத்தகங்களும், தமிழ், இங்கிலிஷ்பாஷைகளில் சில்லறைவேலைகளும் மிகவழகாயும், சுத்தமாயும், வியக்கத்தக்கவிதமாயும் பிழையற விரைவில் நியாயமானசெலவோடு அச்சிட்டுக் கொடுக்கப்படும். விவாகபத்திரம், விளம்பரம், நோட்டு போம் முதலியன விரும்பியவாறு நுண்மையாக முடித்துக்கொடுக்கப்படும்.

## பத்திரிகை.

பத்திரிகையாவது மனிதர்க்குச் சுதந்திர க்ஷேமத்திற்கு வேண்டும் அனுகூலபோதனைகளையும் சமாசாரங்களையும் எடுத்துப் போதிக்கும் கலாரத்நாகரமாம், அதுவொன்ருே, மனிதர் தம்முள்ளங்களிற் ருேன்றும் புருஷார்த்த சாதனமாகும் அபிப்பிராயங்களை ஒருவருக்கொருவர் அறிவித்துத் தர்க்கித்துத் தெளிதற்கும், தெளிந்தபடி அனுட்டித்துப் பயனடைதற்கும் கருவியுமாம். சூரியன் தன்கிரணசமுகத்தால் இருளையோட்டிப்பொருள்களைக் கண்ணுக்குக் காட்டுதல்போலப், பத்திரிகை தன் போதனைகளால் அஞ்ஞானத்தையோட்டி மனித அறிவிற்குப் பொய்ப்பொருளின் வேருக மெய்ப்பொருளை இனிதெடுத்துக் காட்டும் பெருங் கருவியாம்.

பத்திரிகை தத்துவுபதேசங்களை இனிதெடுத்துப் போதித்தலின் மாந்தர்க்கு ஆசிரியரை யொக்கும். செவிக்கினிய உணவுகளைக் காலத்துக்கேற்பப்பிரியத்தோடு உதவுதலால் தாயாரை யொக்கும். நல்ல கல்விகளைப் பருவத்துக்கேற்கப் பயிற்றலின் தந்தையரை யொக்கும். இனியவையாவி இடித்துறுதி கூறுதலின் நட்டாரையொக்கும். துஷ்ட நிக்கிரஞ் செய்து சிஷ்ட பரிபாலனஞ்செய்தலின் நீதி மன்னரை யொக்கும். எத்திறன்மைகளும் பத்திரிகையால் விளையும் அத்தனை மாட்சிமையுடைய பத்திரிகைகளைத் தாபித்து நடத்தி வருதலின் மிக்கநலம் மற்ருென்றில்லை. பத்திரிகைகளின் மாட்சிமையும், அவற்ருல் மனிதர்களுக்கு உண்டாகும் நன்மைகளும், நம்மவர்களுள்ளே பெரும்பலார்க்கு இன்னும் நன்கு புலப்படாதவை. நம்மவருள் கல்வி கேள்விகளால்நாகரீகம் எய்திய சிலர்தாமும் பத்திரிகை நலத்தை மெய்த்திறமாக அறியாதிருப்பாராயின், மற்றையோர் அதன்பெற்றியை அறியாதிருக்கிருர்களென்னல் விருதா வார்த்தையேயாம். உண்மையாக விசாரித்துச் சொல்லுமிடத்து மேலைத்தேசத்தவர்களாகிய ஐரோப்பியர் அமரிக்கர் கல்வி கேள்விகளில் வல்லவராகி, வினைமாட்சியுற்றுச் செல்வப்பெருக்கமும், படைவலியும், அரண்வலியும் மேம்படப் பெற்றுப் பெரு நிலவேந்தராய்த் தமதாணைவழி உலகம்தங்க, தாம் பெரிய நாகரீக நாயகராய் வாழ்வையெய்தி நிலைபெறுதற்குக் காரணம் பத்திரிகைகளென்றே சத்தியமாகச் சொல்லலாம். மேலைத்தேசத்தரசர்கள் அதனலன்ருே பத்திரிகாசிரியர்கட்கு மற்றெத்திறத்தாரைக்காட்டினும் தனி முதன்மைகொடுத்து ஓம்பித்தம் மரசியலுக்குச் சிறந்த மந்திரத்துணையாகக்கொண்டு போற்றி வருகின்ருர்கள்.

மேலைத்தேசத் தரசர்க்கு மந்திரிகளாலும் மற்றைய அங்கங்களாலும் சாதித்தற்கு அரிய பெரிய காரியங்களெல்லாம் பத்திரிகாசிரியர்கள் தத்துவஉபதேசங்களால் தாமே நன்கு சித்தித்து வருகின்றன. எவ்விடத்தும் எக்காலத்தும், யாவர்க்கும், அவர் விரும்பும் புருஷார்த்த சித்திகளை விரும்பியபடி வெளிநின்று பிரசாதிக்கும் கண்கண்டதெய்வம் பத்திரிகைகளேயாம். மண்கொண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் பத்திரிகைகளின்பண்கண்டு பணிந்து, சிரமேற்கொள்வரேல் அப் பத்திரிகைகளை விண்கண்டசமயத் தெய்வரூபமாகவே விவேகிகள் மதித்துப்பாராட்டல் வேண்டும் என்பது துணிபு.

தமிழ் நாட்டில் பற்பல் சமாசார பத்திரிகைகள் அங்கங்கேபரோபகார விவேக புருஷோத்தமர்கள் பலரால் காலந்தோறும் தொடக்கம்செய்யப்பட்டன. அப்படித் தொடக்கஞ் செய்யப்பட்ட பத்திரிகைகளுள் இடையூற்றினல் நடைபெரு தொழிந்தன பல. இடையூறின்றி நடைபெற்று வருவன சில. நடைபெரு தொழிந்த பத்திரிகைகளாலும் நடைபெற்றுவரும் பத்திரிகைகளாலும் தமிழ் நாட்டார் சென்ற காலந்தோறும் எய்தின நன்மைகள் அளவில. அந் நன்மைகளை இன்னது இன்னதென்று எடுத்துத் தனித்தனி முடியக்கூறப்புகின். பன்னெடுங் காலஞ்செல்லும். ஆயினும், அவற்றையெல்லாம் தொகுத்து இதுவென்று ஒரு வார்த்தையாகச் சொல்லின் அந்நாட்டுச்சனங்களுக்கு அங்கிலேய இராச்சிய முறைகளின் நட்ப விவேக விளக்கமும், சுவதந்திர சீவனத்துக்குரிய நானுவித முயற்சிகள் செய்தற்குக்காரணமாகும் சுதேச க்ஷேம அறிவொற்றுமையும் அவைகளால் விளைந்த பேறென்று சுருங்கச் சொல்லலாம்.

## பத்திரிகாசிரியர்

பத்திரிகாசிரியர் பலநூற் கல்வியும், கேள்வியும் நன்குகப் பயின்றவராயும். நல்லொழுக்கம், இராச விசுவாசம், சனேபாகரகுணம், சீவகாருண்ணியம் முதலிய நற்குணமுடையவராயும் இருத்தல் வேண்டும். தம்மறிவுக்கு விஷயமாகும் கருமங்களைப் பழுதறச்சூழ்ந்து கடிதில் தெளிதற்கேற்கும் கூரியவிவேக சுதியுடைமை பத்திரிகாசிரியர்க்குச் சிறந்த சாதனமாம். உள்ளதை உள்ளதாகவும், இல்லதை இல்லதாகவும் துணிவோடு எடுத்துரைக்கும் சத்திய விரதம் பத்திரிகாசிரியர்க்கு வேண்டும் உத்தம குணமாம். உறவினர் கண்ணும் அயலார் கண்ணும் பகைவர்கண்ணும் ஒப்பநின்று உறுதி கூறும் விவேக மாட்சிமை பத்திரிகாசிரியர்க்கு நன்கு மதிப்பைப் பெரிதும் பயக்கும். முறைதிறம்பி நடப்போன் பெருநில்மாளும் இறைமகனேனும் அவன்பால் நன்கு மதிப்பை யொழித்து முறைபோற்றி நடப்பான் துச்சிலிருக்கும் பிச்சை மகனேனும் அவன்பால் நன்குமதிப்பை வைத்து ஒழுகும் அறிவாற்றலைப் பத்திரிகாசிரியர் வித்தகப்படையாகக் கொள்ளல்வேண்டும். பத்திரிகாசிரியர் அரசர்க்காம் முறைகளையும், குடிகட்காம் முறைகளையும் ஆராய்ந்து நலம்பட உரைத்துவருதல் வேண்டும். இராசநீதி, பிரஜா சுதந்திரம் மகாசன அறிவொற்றுமை, தேசக்ஷேமமென்னும் பொதுநன்மைகள் நாளுக்குநாள் அபிவிர்த்தி அடையும்படிஎத்திற உபாயத்தாலும் பத்திரிகாசிரியர் இத்தரையில் பரிபாலனஞ் செய்துவரல் வேண்டும்.

பத்திரிகாசிரியர் சுவானுகூல இச்சையின்றிப் பரானுகூல கருமங்கள் விருத்தியெய்தும்படி போதித்து வருதல்வேண்டும். அங்ஙனம் மேற்கொண்டு ஒழுகும் அவ்வொழுக்கமே அவர் தமக்குச் சுவானுகூலகாரியாய், வேண்டும் சிறப்புக்கள் பலவற்றையும் அவர் எண்ணிய அளவுக்கு அதிகமாகத் தப்பாமல் அவர்க்குப் பயக்கும். குணம் நாடிக் குற்றமுநாடி, அவ்விருபகுதிகளையும்நிறுத்து, மிக்கதனல் ஒருவரைத் தக்காரென்றும் தக்கிலரென்றும் கூறுதலன்றி, குற்றமேநாடி யுரைத்தல் பத்திரிகாசிரியர்க்கு இழுக்காய்முடியும். பத்திரிகாசிரியர் மனிதர் குணப்பிரசங்கத்தைத் தழுவிக் குற்றப்பிரசங்கத்தை விடுதல்வேண்டும், குற்றத்தைப்பிரசங்கிக்காதவழி படுங் கேடுகள் பெரிதாயின், அவ்வியல்புடைய குற்றங்களை மாத்திரம் எடுத்து ஆட்சிசெய்து நல்லுறுதி கூழுமுதல் பத்திரிகாசிரியர்க்கு இழுக்காகாது; விழுப்பமேபயக்கும்.

பத்திரிகாசிரியர் தேச இயற்கைகளையும், சம்பவங்களையும், பல்லாற்ருலும் நன்ருகநாடி உறுதிகளைத் துணிவாக எடுத்து உரைத்தல் வேண்டும். ஒன்றை ஒன்ருகத் திரித் துணர்ந்துகொண்டு கூறுதல் பத்திரிகாசிரிய

...பங்கமாய் முடியும். மனச் ...க்கு மாறுபடாது கொண்டுரை ...விஷயங்களுள் ஒரோ விடத்து ...த்தாற்பரிம் வழுக்காரணமாகப் ...சிரியர் குற்றமுடையவராக ...ர். பத்திராசிரியர் மதத்தர்க ...வித்வான்களும் எடுத்துக்கூறும் ...வாதங்களை நடுநின்று பிரசுரஞ் ...தலையும் உண்மை தோன்றத் து ...உரைத்தலையும் ஒழுக்க நெறியா ...கொள்ளல்வேண்டும். துர்வாதத்து ...ம் மத தூஷணங்கட்கும் பத்திரிகா ...ர் ஒருபோதும் இடங் கொடுத் ...கூடாது. நல்லனநாடி அல்லனநீ ...சொல்வன சொல்லும் பத்திரிகா ...ர் இம்மையில் நல்லோர்வாய்ப்ப ...ம் புகழும் மறுமையில் கடவுள் நல்ல ...ருந்தப்பாது பெற்றுச்சிறப்பர்.

## பத்திரிகை படிப்போர்.

—※—

பத்திரிகைகள், வாசிப்பவர் பொ...ட்டே பிரகடனஞ் செய்யப்படுகின் ...ன. ஆதலால் பத்திரிகையைப் பெற் ...வாசிக்கும் நமதன்பர்கள் அனுப்பப் ...ம் பத்திரிகைகளைத் தினந்தோறும் வைதிக லௌகிக கருமங்களை முடித்த பின்தெளிவான சித்தத்தோடிருந்து சாவதானமாகப் படித்து அவைகளிலுள்ள அபூர்வப்பொருள்களை ஓர் பஞ்சிகையில் இனமினமாகக் குறித்து எழுதி வருதல் வேண்டும். தாம்பெறும் பத்திரிகைகளை வாசித்தபின் க்ஷேமித்து வைத்தல் பெருநன்மையாக முடியும். பெரும்பாலார் வாசித்தவுடனே பத்திரிகைகளைப் புத்தகங்களுக்குக் கவசமிடுதற்கும் மருந்து முதலிய பொருள்களைப் பொதிதற்கும் படங்களைக் குயிற்றுதற்கும் துர்விநியோகஞ்செய்கிறார்கள். விவேகிகள் பிரயாசைப் பட்டு ஆராய்ந்து எழுதிய பெரும் பயனுடைய அரும்பொருள்கள்பல அடங்கப்பெற்ற பத்திரிகைகளை வருந்தித்தேடிய பணத்தைக்கொடுத்துவாங்கி இப்படி அற்ப கருமங்களின் பொருட்டுத் துர்விநியோகஞ்செய்தல் வாசிக்குமன்பர்களுக்குப் புத்தியாகாது. அன்றியும் தாம் கொடுக்கவேண்டிய பத்திரிகைக் கிரயத்தைக் காலதாமதமின்றிக் கொடுத்துப் பத்திரிகைகளை ஆதரித்துவருதலும் அவர்க்குப் பெருங்கடனேயாம்.


# பால சந்திரன்.

சாதாரண ஞு ஐப்பசி மீ ௫௨.


உ

சிவமயம்

உலகமும் பல்லுயிரு மொன்றிநிறைந் தோங்கி
இலகுஞ் சிவனெம் மிறை.

என்றுமொரு பெற்றித்தா மெம்பெருமான் றன்சடைமே
லென்றுமொரு பெற்றித்தாயேயிருந்து - மன்றவளர்
வானி லிளமதிபோல் வையகத்தி லெந்நாளுந்
தானிலவும் பாலசந்த்ரன் றான்.

## பதிகம்.

—

அநாதி மலமுத்த சுத்த சித்துருவாகிய முழுமுதற் கடவுளின் பெருங்கருணையை முன்னிட்டு ஆதியிலே அவரது சிருஷ்டியாகத் தோன்றிய பால சந்திரன், அவாந்தரத்திலே தக்ஷப் பிரசாதிபதியினுற் சாபமேற்றுத், தலைவனைவேண்டி, அவனருளாலது நீங்கப்பெற்று; அவன் சடாமகுடத் தேறிநின்று நிலவி; விண்ணின்று மண்ணுலகிற்குப் பெரும் பயன் கொடுப்பதுபோல;. இந்தப் பால சந்திரனும் பொன்னம்பல வாணேசனிடந் தோன்றி, வெண்காப்பி விமானமேறி விதிகளினூர்ந்து; மாநிலமுழுதுந் தானுபுலவி, மார்தர்களின் மனோ வத்தா...விற்றிருந்து, தாரகாதி சேடியர்சூழத் தன்னை வளர்ப்பாரது கருணையாற்றன்னொளிவிசித் தனது அமுத தாரையால் அன்னவர்க்கெய்தும் தொல்பிணியாகிய நரைதிரை யாதிய மும்மலப்பிணியை வென்னிடச்செய்து பிறவிப்பகையைத் தெறுமிதுதானே.

"உதையபானு" 'இந்துசாதன'முதி பத்திரிகைகளுக்குப் பின் மூளைத்தயாற் பாலசந்திர.னென்றும்; சத்துருக்களால் இடையூறு நேர்ந்தபோதும் தன்னை வளர்ப்பானுல் அவ்விடையூறு நீங்கி மிகவும் பிரகாசிப்பதால் சாபமொழித்தோங்கு மதியென்றும்; தன் வாசிப்பார்க்குத் தண்ணளியும் அஞ்ஞானவொழிபும் ஞானோதயமும் கொடுத்தலினுல் சந்திரனும்.

'குறைபலமாமதி கொளினுமன்றா-அறபயனேக்கியே யுலகம்போறல்போல்" என்றபடி; உலகம் நமது பாலசந்திரனிடத்துள்ள குற்றங்களை பாராட்டாது குணங்களையே பாராட்டும் என்பதாம்.

அவர் சடாமுடியில் தரித்தது ...னசந்திரன்; சாபமேற்ற பௌதிக சந்திரன் தன்சாபநீங்க அதனோடொருமையுற்று; விளங்கியதென்பதாம். ...து அவ்விரண்டு சந்திரர்களையும் அடக்கிய பூலோக சந்திரனும் விளங்கு மென்பதாம்.

உலக நன்மை விசாலிப்பதற்குள்ள காரணங்களுள் சமாசாரப் பத்திரிகை அதி முக்கியமும் அவசிய ஆதாரமானதென்றும் பத்திரிகைகள் எவ்வளவு விருத்தியாயினும் அவ்வளவும் உலக நன்மையை மேன்மேலும் வளர்த்துவர ஏதுவாமென்றும், தேசாபிமானிகள் யாவரும் நன்கறிவார்கள். அத்தகைய தேசாபிமானிகளுட் சிலர் தேசானுகூலஞ்செறிந்த பத்திரிகை ஒன்றைப் பிரசுரித்து வருமாறு நெடுங்காலமாய் எம்மை வற்புறுத்தி வந்தமையாலும், தேசாபிமானத்தை மற்றைத் தமிழ்ச் சகோதரப் பத்திராதிபர்களோடு நாமும் பங்கிட்டுக்கொள்ளவேண்டுமென்னும் பேராவல் நம்மனதில் நெடுங்காலமாக நிலைபெற்றுத் தூண்டிவந்தமையாலும் .சனங்களின் பொது நன்மையைக்கருதி 'பால சந்திரன்' என்னும் இப் பத்திரிகையைப் பிரசுரித்துவர முன் வந்தோம். இங்ஙனஞ் செய்யுமாறு வற்புறுத்தின தேசாபிமானிகளாகிய நமது நண்பர்களுடைய விருப்பத்திற்குடன்பட்டு நமது மனத்துக்கிடந்த தேசானுகூல ஆவலை நிறைவேற்ற முன்வந்தோமாயினும் அவ்வாவல் மிகுதியால் உலகோத்தமமான பத்திரிகா நிர்வாகத்தையும் அது இடையறாதுநடைபெறவேண்டிய முயற்சியையும் எண்ணி, தமிழுலகிலுள்ள தேசாபிமானிகளின் கௌரவ அபிமானத்தையே பெரிதும் வேண்டுகின்றோம். தேசாபிமானம் உண்டாக வேண்டுவது செல்வர்களிடத்து மாத்திரமேயென்றும், செல்வ மில்லாதார்க்கு அது வேண்டப்படாதென்றும் நியதி இல்லை. நாடோறும் சிவனஞ்செய்து வயிறோம்ப வகையற்ற ஒரு ஏழையினிடத்தும் தேசாபிமானம் என்னும் அச்சிறந்த உணர்ச்சி உண்டாக வேண்டியது அவசியமே. ஆயின் தேச நன்மையை நாடுதற்குப் பொருள் அவசியம் வேண்டியிருத்தலால், தேசாபிமானம் செல்வர்களுக்கு அத்தியாவசியகம் வேண்டற்பாலது. தற்காலத்திலோ அது அவர்களைவிட்டுப்பெரும்பாலும் நீங்கிவிட்டது.

ஆங்காங்குச் சில செல்வரே தேசாபிமானிகளாய் விளங்குகின்றனர். செல்வத்திற் சிறிதினைத்தபலர் .தேசநன்மையைப் பெரிதும் நாடி அதன்விருத்திக்கேற்ற பல முயற்சிகளைச் செய்துவருகின்றார்கள். செல்வர்களும் செல்வத்திற் சிறிதினைத்தோருமாகிய யாவரும் ஒருங்குசேர்ந்து தேசாபிமானங் கொண்டாடுவார்களாயின், தேசக்ஷேமம் நாளுக்கு நாள் விருத்தியாகி வருதலிற் சந்தேகமில்லை.

தாங்கள் பெரும் பொருள் செலவிட்டுத் தம் தேச விருத்தியை நாட ஒருப்படாவிடினும். அவ்விருத்திக்கென்றே முன்வரும் பத்திரிகைகளையாவது ஆதரித்துவரின் அது எவ்வளவுநன்மையாக்முடியும் அவ்வகை ஆதரவை பெரிது கிடைப்பினன்றோ பத்திரிகைகள் விருத்தியடையும்.

அங்ஙனம் பத்திரிகைகளை ஆதரிப்பதற்கு நம்மவர் செய்யவேண்டியதென்ன? பத்திரிகைகளை அவற்றின் விலையைக் காலந்தவறாது கொடுத்து வாசித்துவருதலொன்றே போதியது. பத்திரிகைகள் அதிகமாக விருத்தியாயின் தேசாபிமானமும் தேசாபிமானிகளும் விருத்தியாகித் தேசம் சிறப்படையும்.

இவைகளை நன்குக யோசித்து "பாலசந்திரன்" என்னும் இப்பத்திரிகையை எமது அன்பர்களின் பார்வைக்கு அனுப்புகின்றேம். அதைப்படித்து அதற்குரிய கிரயத்தை உள்ளன்போடு செலுத்தி எமது முயற்சியை விருத்திசெய்வீர்களெனப் பெரிதும் நம்புகின்றேம்,

இம் முதற் பத்திரிகை இன்றுவெளிப்படுத்தப்பட்டது, இனிஎம்பத்திரிகை சனிவாரந்தோறும் பிரசுரித்து வெளிப்படுத்தப்படும். இப் பத்திரிகைகளை அங்கங்குள்ள தமிழ்ப் பத்திரிகாசிரியர்க்கு அன்போடு அனுப்பிவருவேம். அவர்களும் தம் பத்திரிகைகளை எமக்கனுப்பிவருவார்களென எதிர்பார்த்திருக்கின்றேம்.

அங்கங்கே எமது பத்திரிகையை விருத்திசெய்தற்கு முகாமைக்காரராகவிருந்தும் இப்பத்திரிகையின் விதானங்களுக்கேற்பக் கடிதம் முதலியன எழுதியனுப்பியும் எம்மை ஆதரித்துவரும் அன்பர்களுக்கு வந்தனத்தோடு நாம் எமது பத்திரிகையைக் கிரயமின்றி அனுப்பி வருவேம்.

## Local and General.

## சுதேச வர்த்தமானம்.

தேசாதிபதி அவர்கள்:—அயிட்டிங்காக அற்றேணிஜனரல் வேலைநடத்தும் கனம் உவால்டர் பெரேயிரு அவர்கள் மாளிகைக்கு நமதேசாதிபதி அவர்கள் சென்றசனிக்கிழமை சென்று சிறிதுநேரம் அவரோடு சம்பாஷணைநடத்தித்திரும்பினார்கள்.

—

நகரசங்கம்:—இன்று கூடும் இச்சங்கத்தில் இங்கு ஜர்மனிய இளவரசரும் பாரியாரும் விஜயஞ்செய்யுங்காலத்து அவர்களுக்கு எவ்வகை உபசரணைகள் நடத்தப்படல் வேண்டுமென்பதும்; சுகாதாரத்துக்கு வேண்டிய வேறுசில கருமங்களும் யோசிக்கப்படும்.

—

போசனசாலை—இங்கேயுள்ள ஜீ. ஓ. எச். போசனசாலையை 10 இலட்சம் ரூபா செலவிட்டுப் பெருப்பித்துக் கட்டுதற்கு அதன் காரியகர்த்தர்கள் முடிவுசெய்திருக்கின்றார்கள்.

—

முகம்மதிய பிரதிநிதி—சட்டநிரூபணசபையில் இப்பொழுது இருக்கும் பிரதி நிதியவர்கள் காலவெல்லை முடிவதால், புதிதாயொருவரை நியமித்தற்கு அங்கங்கே முகம்மதியர்கள் பிரசித்த சபைகூடிச் சிலரைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள், சென்ற வாரத்தில் யாழ்ப்பாணத்தில் கூடிய பிரசித்தசபையில் மிஸ்றர் ஒ. எல். எம். அப்துல் அஸீஸ் எ.படவரைத் தெரிவுசெய்து; தங்கள் கருத்தைத் தேசாதிபதியவர்களுக்கு விண்ணப்பித்தற்கு முடிவுசெய்தார்கள்.

உத்தியோக மாற்றம்:—இங்கே காணிப்பதிவு துபேசிஸ்ரிக்காரராக விருக்க ஸ்ரீ. சுப்பிரமணியமென்பவர் முல்லைத்தீவு டிஸ்திறிக் கோட்டுச் சக்கடுத்தாராகவும் அப்பகுதிக் காணிப் பதிவுத் தலைவராகவும் நியமனம் பெற்றனர்.

—

அருச்சப்பு:—மருதானையில் ஓர் சிறுவன் சில சாமான்களைக் கையிற் கொண்டு செல்லும்போது தண்டவாளம் தடக்க விழ்ந்தான். உடனே திரும் வண்டியும் சென்றது. வண்டிச்சாரதி இவ்வபாயத்தைக் கண்டு உடனே வண்டியை நிறுத்திப் பையனைத் தேடும்போது அவன் வண்டிக்குக்கீழ் யாதொரு காயமுமின்றிக் கிடந்தான். அவனை வெளியே மீட்டவுடன், அம்மே! என் சாமானகள் போய்விட்டனவே! நாச்சியார் அடிப்பாளே! எனக்குரவையிட்டு அழுதுகொண்டு சென்றுனும்.

—

நியாய பரீட்சை:— இங்கே நடந்த தாணிமாரின் இரண்டாம் பரீக்ஷையில் சித்தியடைந்த பதினொரு பேர்களில், பெருமாள் பிள்ளை, செல்வ ரத்தினம், சோமசுந்தரம் என்னும் தமிழர் மூவரும் சித்திபெற்றனர்.

—

முத்திரை:—இவ்வருடத்தின் நான்காம்முறைக்குரிய முத்திரைகள் இம்மாசக்கடைசியில் இங்கு கொண்டுவரப்படும். இலங்கையில் பாவிக்கப் படும் பலவகை முத்திரைகளும் நாளொன்றுக்கு 14,000 ரூபாவுக்குக் குறையாமல் விலைப் படுவதாகச் சொல்லப் படுகின்றது. சென்றவாரத்தில் ஒரு உறுதிக்கு ஒட்டுவதற்கு ஒவ்வொன்று 1000 ரூபா விலைகொண்ட 37 முத்திரைகள் ஒருவருக்கு விற்கப்பட்டதாம்.

—

புலி:—பனுவையி லிருந்து பொத்துவில்லுக்கு ஒரு மாட்டுவண்டியில் ஆறுபேர் பிரயாணஞ்செய்து போகும்பொழுது புலியொன்று புறப்பட்டு மாடுகளிலொன்றைச் சருவி அதைக் கொன்றுவிட்டதாம்,

—

புகைரதப் பாதை:—நீர்கொழும்பிலிருந்து சலாபத்துக்குத் திறக்கப்படவேண்டிய புகைரதப் பாதையைக் குறித்த படங்களும் மதிப்பும் முடிந்தன. இப்பாதை ஒன்றில் நீர்கொழும்பி லிருந்து இராசகதளுவை வரைக்கும் அல்லது நேரே சலாபத்துக்கு மாத்திரம் திறக்கப்படும்,

—

கூலிக்காரனின் துணிவு:—சென்ற சனிக்கிழமை வடிவேல் என்னும் கூலிக்காரன் குகலைத் தோட்டத்துக்குச் செல்லுமாறு புகைரதத்தில் புறப்பட்டான். சற்றுத்தூரம் செல்லவே அங்கு செல்வதற்கு மனமொருப்படாது வண்டி அதிக துரிதமாய்ச் செல்லும் போது குதித்ததினுல் காலும் முறிந்து உடனே யிறந்துபோயினன்.

—

மகா முதலியார்:—சார் சலமன் பண்டாரநாயக அவர்கள் இங்கிலாந்திலிருந்து இவ்விடம் நோக்கிப் புறம்பட்டுவிட்டார்கள். இந்தமீ 29-ந் உ அவரைக் கனப்படுத்தி உபசரிக்கும் நோக்கமாக அவருடைய நண்பர்கள் ஓர் கொண்டாட்ட சபை கூடுவார்கள்.

—

அபினுல் நேர்ந்த மரணம்:—அபின் குத்தகை நிறுத்தப்படவே அரசாட்சியாரே பலவிடங்களிலும் அபினை விற்க ஒழுங்கு செய்துகொண்டனர். இவ்விடங்களில் அபின் வாங்குவோர் முன்னமே தங்கள் பேர் ஊர் தின்னும் அளவு முதலிய விபரங்களை எழுதிக் கொடுத்தல் வேண்டுமென்பது சட்டம். இதை யறியாத காலியிற் சிங்களவனொருவன், அபின் வாங்கப் போயும் குறித்த விபரங்களை முன் கொடுக்கத் தவறியதால் தனக்கு வேண்டிய அபினைப் பெற்றுக்கொள்ள அவனுக்கு வாய்க்கவில்லை. அபின் தின்னத் தவறியதால் அவனுக்கு மரணத்துக்கேற்ற மூர்ச்சை யுண்டாகி வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டான. அங்கே வைத்தியர்கள் அவனுக்கு நேர்ந்த நோயின காரணத்தை யறிந்தும் உத்தரவின்றி அபின கொடுக்க இயலாமையால் தேசாதிபதி யவர்களுக்குத் தந்திவழியாக விண்ணப்பஞ் செய்தனர். உத்தரவு கிடைக்குமுன அவ்வேழை உயிர் துறந்தனன.

—

மாறுபாடு:—காலியில் வர்த்தகம் நடத்தும் ஹேயிலி கம்பனியாரிடம் 19 வருடம் தொழில் நடத்தி வந்த ஜான்ஸ் என்பவர் அக் கம்பனியாரை யனுப்பி மாறுபாடாகப் பொருள் கவர்ந்ததாக வழக்கில் அகப்பட்டிருக்கின்றார்.

ஞாபகசின்னம்:—எங்கள் அரசராயிருந்து இறந்தபோன எட்வேர்ட் அரசரின ஞாபக சின்னமொன்று இங்கேயமைத்தற்பொருட்டு அரசினர் வேண்டிய முயற்சி செய்கின்றார்கள். எவ்வகைப்பான ஞாபகசின்னம் அமைத்தல் வேண்டுமெனபது இன்னும் முடிவாகவில்லை, இதை முடிவுசெய்வதற்கு ஓர் கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கின்றது. அக்கமிட்டியார் தங்கள் கருத்தை அடுத்த மாசத்தில் தெரிவிப்பார்கள்.

—

சலப்பிரவாகம்:—இரத்தினபுரிப் பகுதியில் அதிக மழை வருஷித்ததினுல் களுகங்கையாறு பெருக்கெடுத்துப் பாய்கின்றது. இன்னும் இரண்டொரு தினங்கள் மழை வருஷிப்பின் இவ்வாறு சலப்பிரவாகத்தால் அதிக கேடு சம்பவிக்கும்போலும்.

—

தெய்விக தண்டனை:—களனியில் ஓர்திருடன் தோட்டங்களிலுள்ள தேங்காய்களையும் வேறு காய்கனிகளையும் வழக்கமாகத்திருடிவந்தும் அகப்படாது திரிந்தான். இவன் சென்றவாரத்தில் ஓர் தோட்டத்துள் நுழைந்து தென்னையிலேறித் தேங்காய்பறித்துக் கொண்டிறங்குகையில் தவறிவீழ்ந்து காலை முறிந்து வைத்தியசாலைக்கனுப்பப்பட்டான்.

—

அளவு வேலைப்பகுதி—இப்பகுதியின் சிரேட்டராகவிருந்த மிஸ்றர் உவறன் அவர்கள் வேலையினின்றும் இளைப்பாற அவரிடத்துக்கு, மிஸ்றர் தெம்பிள்டன் என்பவர் நியமனம்பெற்றனர்.

—

சிரேட்ட நீதிபதி—சுப்பிறீங்கோட்டுச் சிரேட்ட நீதிபதி சார் ஹட்சின்சன் அவர்கள் அடுத்த மார்ச்சு மாசத்தில் உத்தியோகத்தைவிட்டு இளைப்பாறுவார்கள் ஆயின் பெப்ருவரி மாசம்வரையில் இவ்விடத்திலேயே தங்கி, பின் சீமைக்குப் புறப்படுவார்கள். திரும்பும்போது சிங்கப்பூர், சீனு, ஜப்பான் முதலிய இடங்களைக்கண்டு செல்வார்கள்.

—

வைசூரி—மருதானைப்பகுதியில் இந்நோய் ஆரம்பித்திருக்கிறதுபோலத் தெரிகிறது. யாவத்தைப்பகுதியிலிருந்தே இந்நோய் அங்கு சென்றதாம்.

—

## ஸ்ரீமத். சு. ஏரம்ப ஐயரவர்கள்,

மதுரைத் தமிழ்ச்சங்க வித்வானகளில் ஒருவரும், சைவ பரிபாலனசபைப் பிரசாரகர்களி லொருவரும், நீர்வேலிச் சைவவித்தியாசாலை அதிபரும், சிறந்த வித்துவானுமாகிய இவர்கள் தற்காலம் இவ்விடம் வந்திருக்கின்றார்கள். குறித்த சைவவித்தியாசாலையைஇவர்கள் பெருந்தொகை செலவிட்டுக் கட்டி ஒருவாறு முடித்து நடத்தி வருகின்றார்கள். அவ்வித்தியாசாலைக் கட்டடத்தில் இன்னும் செய்யப்படவேண்டிய வேலைகள் சில உள. அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு இங்குள்ள சைவப் பிரபுக்களிடம் பொருட் சகாயம் பெறுதலே அவர்கள் இங்கு வந்த நோக்கம். இதுவரையில் சில கனவானகள் பொருளுபகரித்திருக்கின்றார்கள்: வித்தியாதானம் எல்லாத் தானங்களிலும் சிறந்ததெனபது சைவாபிமானிகள் யாவர்க்கும் தெரிந்த விஷயமே. ஆதலால் ஐயர் அவர்கள் நோக்கத்தை நம்மவர் உலோபமின்றி முற்றுப் பெறச் செய்தல் அவர்க்குப் பெருங் கடனேயாம்: இங்கே தங்கும் நாட்களில் அவர்களைக்கொண்டு பிரசங்கஞ் செய்விப்பதற்கும் சிலர் முயற்சிக்கின்றார்கள்.

குருநாக்கல், கண்டிமுதலிய விடங்களுக்கும் ஐயரவர்கள் பிரயாணமாவார்கள். அங்கங்குள்ள நண்பர்கள் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்வார்களென நம்புகின்றேம்.

—

ஸ்ரீமத், சி. தாமோதரம்பிள்ளை அவர்கள்:—ஞானசித்திப் பத்திராதிபரும் சித்தாந்த சாத்திர விற்பன்னருமாகிய இவ் வித்துவான யாதோ அலுவல் காரணநிமித்தம் யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருக்கின்றார்.

—

ஸ்ரீமத். பொ. இராமநாதன அவர்கள்:—குருநாக்கலில் வசிக்கும் பலபிரபுக்களின கேள்விக்கிசைந்து சென்ற சனிக்கிழமை அங்குள்ள நகர சபா மண்டபத்தில் "பரோபகார"த்தைக் குறித்து ஸ்ரீமத். இராமநாதன அவர்களால் ஓர் சிறந்த உபந்நியாசஞ் செய்யப்பட்டது. உபந்நியாசகரின வரவை அங்குள்ள சபையார் எதிர்பார்த்திருந்து அவரை மிக விமரிசையோடு அழைத்துச் சென்றார்கள். இடம் வாய்ப்புழி அடுத்த பத்திரிகையில் பிரசங்க சாரத்தைத் தருவோம்.

தபாற் கப்பல்—இந்தியாவிலிருந்து சீமைக்குச் சென்ற ஓர் தபாற்கப்பலைக் காணவில்லையாம்.

விடுதலை:—தீபாவலிப் பண்டிகையின்பொருட்டு இந்தமாசம் 31ந்உ இங்குள்ள வங்கிச்சாலைகள் பூட்டப்படும்,

கொத்தாரிசு:—இரத்தின புரியில் விக்கிரம சிங்கமென்னும் கொத்தாரிசு கடனுறுதியொன்றை யெழுதிப் பணத்தைக் கடன் வாங்குபவரிடம் தாமே கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றிருப்பதாக அதைக் குறித்த வழக்கில் சாட்சிசொன்னார். நீதிபதி அவர் வாக்கை நம்பாதுஉடனே அவரோடு அவருடைய வீட்டுக்குச் சென்று அப்பற்றுச்சீட்டைக் காண்பிக்கும்படி கேட்க, கொத்தாரிசு விழித்தார். இவருடைய மாறுபாட்டைக்குறித்து, காணிப்பதிவுக் காரிய தலைவருக்கு எழுதியிருக்கின்றார்.

இராசமாலிகிதர்—இலங்கை இராசமாலிகிதராகிய சார் ஷியூ கிளிவ்வோட் அவர்கள் சென்ற 24உ சீமையில் விவாகஞ் செய்துகொண்டனர்.

றப்பர்:—இதன் விலை இரண்டரை பென்ஸ் இறங்கிவிட்டது.

மாட்டுநோய்-இந்நோய் இரத்தின புரிப்பகுதியில் இன்னும் ஒழியவில்லை. இதனால் அங்குள்ள சில தெருக்களில் மாட்டு வண்டிகள் போக்கு வரவு செய்யாதபடி தடை செய்யப்பட்டது.

ஜர்மனிய இளவரசர்:—இவ்விளவரசர் தம் பாரியாருடனும் அமைச்சர் ஆதி பரிசனங்களுடனும் அடுத்த மாசம் 20ந் திகதி எமது துறைமுகத்தி லிறங்குவார். இவ் வரசு குடும்பத்தவரை யிங்கே எவ்வாறு உபசரித்தல் வேண்டு மென்பதைக் குறித்து நம் அரசாங்கத்தவர் ஏற்கனவே ஓர் சபை கூட்டி, நடக்க வேண்டிய ஒழுங்குகளைக் குறித்து முடிவு செய்திருக்கின்றார்கள். 22-ந்உ வரையில் இங்கு தங்குவார்கள். கேசாதிபதியவர்களால் இராணி மாளிகையில் அவர்களுக்கு ஒரு விருந்து நடத்தப்படும். பொதுவாக இவ்விராச குடும்பத்தார் இங்கே தங்குங்காலத்தில் "கோல்பேஸ ஹோட்டல்" என்னும் போசன சாலையில் வசிப்பார்கள். அதற்காக அங்கே இருபது அறைகள் திட்டஞ் செய்யப்படும்.

23உ கண்டிக்கும், 25உ நுவரெலிக்கும் போய் மீண்டும் கண்டிக்குத் திரும்பி, காட்டுத் தம்பளை, அநுராசபுரம் முதலிய விடங்களுக்குச் சென்று, டிசம்பர் மாதம் 8-ந்உ திரிகோணமலை, கந்தளாய் முதலிய விடங்களைக் கண்டு 10உ வரையில் இவ்விடம் திரும்புவார்கள். செல்லும் இடங்களி லெல்லாம் விசேஷ உபசரணைகள் நடத்தப்படும். இளவரசர் அங்கங்குள்ள பல சிறப்புகளையும் புராதன கட்டடங்களையும் பார்ப்பதோடு விசேஷமாகக் கந்தளாய்க்காட்டில் வேட்டையாடுவர். 11-ந் தேதி இவ்விடம் விட்டு இந்தியாவுக்குச் செல்வார்கள்,

## வழக்கு.

துறைமுகத்தில் களவு—என்புப்பயலையடக்கிய மூட்டையான்றைத் துறைமுகத்தில் திருடிய மார்ஷல் என்பவன் ஒருவாரம் சிறையிருக்கப் பெற்றான்;

குடியால் நேர்ந்த மரணம்:—குடிகாரனாகிய அந்தோனி யென்பவன் வெறிமயக்கினால் தனது ஐந்து வயதுக் குழந்தைக்கு மிதமிஞ்சிச் சாராயத்தைப் பருக்கியதனால் அக்குழந்தை இறந்து விட்டது. இவ்வழக்கு இப்பொழுது நடக்கும் சுப்பிரிங்கோட்டில் விசாரிக்கப்பட்டது; பூச்சிநோயின் பொருட்டுக் குழந்தைகளுக்குச் சாராயம் பருக்கல் வழக்க மென்றும் அவ் வழக்கப்படியே அவன் தன் குழந்தைக்குச் செய்தானென்றும் [illegible] ஜூரிமாரும் இதை யொப்புக்கொண்டு அவனை விடுதலை செய்தார்கள்.

அப்பீல் வழக்குகள்:—அடுத்த மாசத்துள் ஏறக்குறைய 12 அப்பீல் வழக்குகள் சீமைக்கு அனுப்பப்படுமாம்,

வைத்தியரைச் சருவல்:—செக்கடித் தெரு 85ம் இலக்க வீட்டில் வசிக்கும் சுகேச வைத்தியரிடம் மு. நடராசா எனபவர் மருந்தெண்ணெய் தரும்படி கேட்டபொழுது, அவர் கைவசமில்லையென்று சொல்ல, அவர் அவ்வைத்தியரைச் சருவியதனால் வழக்குக்கொண்டுவரப்பட்டு வழக்காளிக்கு எதிரி 5 ரூபா கொடுத்துச் சமாதானமாய் முடித்துக் கொண்டார்

சுருட்டுத்திருடல்:—பொறளையில்சுருட்டுக்கடை வைத்திருக்கும் முத்தையா என்பவர் தமதுகடையில் வேதனத்துக்கிருந்தஒருவன் 35 ரூபாய் பெறுமதிகொண்ட சுருட்டுகளைத் திருடிக்கொண்டு மறைந்துவிட்டானென, அவனில் வழக்குக்கொண்டுவந்திருக்கின்றார்.

## யாழ்ப்பாணம்.

—:※:—

இங்கே மழையில்லாமையினால் பயிர்கள் வாட்டமடைகின்றன. இன்னுஞ் சிலநாட்களில் மழை பெய்யாவிடில் வேளாண்மை முற்றாய் மோசம்போய்விடுமெனச் சனங்கள் துன்பமடைகின்றார்கள். பருவமழை யில்லாமையால் இந்நாடு சில வருடங்களாக அடைந்துவரும் கஷ்டம் மிகவே.

உஷ்டண மிகுதியினால் கண்ணோ மிக அதிகரித்து வருகின்றது.

வைத்தியர் கைலாச பிள்ளை:—காங்கேசன் துறையில் அரசாங்க வைத்தியராகவிருக்கும் இவர் இம் மாசத்தோடு வேலையால் இளைப்பாறுவார். இவர் 33 வருடம் பலவிடங்களிலும் தமது உத்தியோகத்தை நேர்மையாகவும் சாதுரியமாகவும் நடத்திவந்தவர், இவர் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த துணைவை என்னும் குறிச்சியைச் சுயநாடாக வுடையவர்.

தோட்டத்தில் குழப்பம்:—கனகராயன் என்ற தோட்டத்தில் ஏறக் குறைய இரண்டு வருடங்களாக 150000 தேங்காய் உபயோக மற்றுக் கிடக்கின்றது இருபகுதியாருக்குள் நேர்ந்திருக்கும் பிணக்கே இதற்குக் காரணம். ஒருபகுதியார் அவற்றையெடுக்க முயனறால் மற்றப் பகுதியார் மறித்து விடுகின்றார்கள். சென்றவாரத்தில் அத்தேங்காய்களை யெடுத்துச் செல்லும்படி ஒருபகுதியார் துணிந்தும் பின்னும் மற்றப்பகுதியார் பொலிஸ் அதிகாரிகளோடு சென்று அவர்களைத் தடுத்துவிட்டார்கள். இவ்விரு கட்சியாரின் விவகாரம் முடியமுன் இத்தொகைத் தேங்காய் வீண்போவது எவ்வளவு நஷ்டமாக முடியும்.

ஸ்ரீ சம்பந்தர்:—கொட்டகல்லையில் தபாற் கந்தோர் இரண்டாம் தலைமை பெற்றிருந்த இவர், வவுனியாவுக்கு மாற்றப்பட்டார்,

# Telegrams.

## தந்தி வர்த்தமானம்

போட்சுகல் சமரதியாகிய மார்குயிஸ் டி சோவிறல் என்பவர் உத்தியோகத்தைப் பரித்தியாகஞ்செய்துவிட்டார்.

போட்சுகல் கலசம்.

றாபெறி என்ற இடத்தில் வெடிக்குண்டெறிந்து கட்டடங்களைச் சேதப்படுத்துகின்றார்கள்.

மனுவல் அரசரின் பொருள்பண்டங்கள் யாவும் பிரித்தானிய மந்திரியாரின் பிரதிநிதி பொருவரிடம் ஒப்படைக்கப்பட்டன. அங்குள்ள படைவகுப்பாருள் இராசதுரோகமானசதியாலோசனைகள் தொடங்கி யிருப்பதாகவும் தெரிகின்றது.

மனுவல் அரசரும் இராணி எமிலியாரும் ஜிபிரோல்டரைவிட்டுப் புறப்பட்டுவிட்டார்கள்.

பரிஸ் திரும்வே பகுதியில் வேலைசெய்வோர் வேலைக்குப் போகாது நின்றுவிட்டார்கள்.

புகைரத ஸ்தானங்களில் வேலை செய்தோர் வேலைக்குப் போய் வருகிறார்கள்.

புயல்.

பிரித்தானியாவில் அடித்த பெரும்புயலினால் ஓர் கப்பல் கரைக்கள்ளுளுப்பட்டது. 20 பேர்கடலில் ஆழ்ந்து இறந்தனர்.

பிரான்சு

இங்கும் வேலைக்காரர் குழப்பம் அதிகரிக்கின்றது. புகைரதப் பகுதிகளில் வேலைக்காரர் பெருங் குழப்பங்கள் செய்கின்றார்கள். மின்சாரக் கம்பிகளை அறுத்து தீபங்களை அவித்துவிடுகின்றார்கள்.

இங்கே வேலைக்காரரின் குழப்பங்கள் ஒருவாறு அடங்க, புகைவண்டிப்பிரயாணிகளைத் துப்பாக்கியினாற்சுடுதல், தண்டவாளங்களைப் பிரித்தல் முதலிய குழப்பங்கள் தொடங்கியிருக்கின்றன. இக்குழப்பம் அரசாங்கத்தைக்கெடுப்பதற்காக உண்டுபட்டதென்று சொல்லப்படுகின்றது. சில இராசதுரோக சங்கத்தாரின் நெடுங்கால யோசனையின் முடிபே இதுவென்பது அரசாங்கத்தார் தீர்மானம்.

பரிஸ நகரசங்க அங்கத்தவர் ஒருவரின் மாளிகைக்கு வெடிக்குண்டெறியப்பட்டது. இதனால் மூன்றுபேர்இறந்தனர், வேறு பலவகைச் சேதங்களுமுண்டாயின,

அட்மிரல் றீஸ் எனபவரைச் சதிக்கொலை செய்தவர்களில் ஐந்துபேர் பிடிக்கப்பட்டனர்.

எகிப்து.

இங்கும் புகைரதப்பகுதியில் வேலை செய்வோர் சம்பளத்தைக் கூட்டிக்கொடுத்தல் வேண்டுமெனக் கேட்ட கேள்வி அதிகாரிகளால் மறுக்கப்பட்டதால் கலகஞ்செய்கினறார்கள். புகைரதங்கள் போக்கு வரவு செய்கலையும் தடுக்கினறார்கள், புகைரதபண்டசாலைகள் படைவீரரால் பாதுகாக்கப்படுகினறன.

# பொது விஷயம்.

## அதிகாலையில் எழுந்திருப்பதனால் உண்டாகும் பயன்

—(0)—

காலையில் அருணோதயத்துக்குமுன் நித்திரைவிட்டெழுந்திருப்பது தேகசுகாதாரத்துக்கேற்ற தென்று சாத்திரம் முறையிடுகின்றது. ஒருநாள்முழுதும மனம்பலவாறாக உழன்றபின் இரவில் அயர்ந்து நித்திரைசெய்து மனதுக்கு வேண்டியவரையில் ஆறுதல் கொடுத்தபின, அதிகாலையில் எழுந்திருப்போமாகில், மனம் மிகவுந்தெளிவடைந்திருக்கும். இராத்திரியில் தூங்குவதற்குமுன இரண்டு மூனறுமணிநேரம், கஷ்டப்பட்டாலும் வராதபாடம் அதிகாலையில் அரைமணி நேரத்துள் அதுமனதில் நனறாகப்படிவதை ஒவ்வொரு வித்தியார்த்தியும் அநுபவசித்தமாகக் காணலாம். ஆகையால் மனம்அக்காலத்தில் தெளிவடைந் திருக்கிற தெனபதற்கு ஐயமில்லை. வாசிப்பில் நாட்டமுள்ள வித்தியார்த்திகளான பாலியர்களுக்கு அதிகாலையிலெழுந்திருப்பது எவ்வளவு உசிதமோ, அதுபோலவே, நடு வயதுள்ளவர்களும் வயோதிபர்களும் அதி காலையில் எழுந்திருக்கும் வழக்கத்தை அநுஷ்டிப்பார்களானல், அது அவர்களுக்குப் பெரும்நனமையைப் பயக்கும்.

அது அவர்களுடைய தேகாரோக்கியத்தை அபி விர்த்தி செய்வதோடு ஆயுளையும் விர்த்தியாக்கத் தக்கது. காலையில் ஐந்துமணிக்குமேற்பட்டு உறங்கும் ஒவ்வொருவனையும் பிணியாளனென நே சொல்லவேண்டுமெனறு ஓர்பிரபலவைத்திய பண்டிதர் கூறுகினறார். தேவாராதனை முதலியவற்றிற்கு மனம்மிகவும் தெளிவடைந்து நிர்மலமா யிருக்கத்தக்க அதிகாலையே மிகவிசேஷம். இந்தவிஷயத்தை அநேகயுகங்களுக்கு முனனரே நமது பூர்வீக இந்துக்கள் வெகு நன்றாகஅறிந்தனர். திருப்பள்ளி யெழுச்சி திருவெம்பாவை ஆகிய இவற்றை ஈஸ்வரசந்நிதானத்தில் ஓதுதல்எனனும் பிராதக்கால தேவஆராதனை ஏற்பட்டமையே இதற்குச் சாட்சி பகரத்தக்கது.

பிரதமத்தில் அதிகாலையில் படுக்கையைவிட் டெழுந்திருப்பதை விடக்கஷ்டமானசெய்கை வேறொனறுமிராது. அயர்ந்து தூங்கிக்கொண் டிருப்பவனைஎழுப்பும்போது அவனுக்குப் பெருங்கோபமுண்டாவது இயற்கையே, இரண்டொரு நாளைக்கு அந்தப்படி எழுந்திருக்கப்பழகிக்கொண்டால் பினபு அதனாலுண்டாகும் சுகத்தை ஒவ்வொருவனும் அடைந்து அநுபவிக்கத்தக்கதா யிருக்குமேயன்றி அது இப்படிப்பட்டதெனறு பிறருக்குச் சொல்ல வொண்ணாததாயும்முடியும். முக்கியமாய் நமது தேசத்தைப் போனற உஷ்ணப்பிரதேசங்களில் அதிகாலையில் எழுந்திருந்து நாற்புறமும் விருட்சவர்க்கங்களின பசுமையையும்! புள்ளினங்களின இனிய ஓசையயும், நதி ஏரி சமுத்திரம் முதலிய இடங்களிற் பிரதிபலிக்கும் அருணோதயப் பொலிவையும் காண்பதனால் உண்டாகும் சுகமே சுகம்,

அந்தணர்கள் ஆதியிலே வேதாகம இதிகாசங்களை யோதி மனனம் செய்யவேண்டியிருந்தபடியால், அதற்காக அவர்களுக்கு ஞாபகசக்தி யதிகரிக்க வேண்டிய அவசியமிருந்தது. அதை யடையும்பொருட்டு அவர்கள் செய்த காரியம் யாது? பிராதக்காலத்தில் எழுந்திருந்து ஸ்நானஞ் செய்வார்கள். இதுவே அவர்களுடைய ஞாபகசக்தியை அபி விருத்தியாக்கத் தக்கதோர் பெருங் கருவி. அவ்வாறதிகாலையில் ஸ்நானம் செய்தபோது குளிர் மிகுந்தபடியால் உடனே சுகத்தைத் தரத்தக்க சிறு காஷ்டங்களாகிய சமித்தைக்கொண்டு ஓமஞ்செய்து ஈஸ்வரத்தியானம்பண்ணி வந்ததுமன்றிக் குளிர்காய்ந்தும் வந்தார்கள். இவ்வகையொழுக்கங்களினாற்றான் ஏனைய வருணத்தாரைவிட அந்தணர்களுக்கு ஆதியில் புத்தி கூர்மையும் ஞாபகசக்தியும் விவேக விளக்கமும் மிகுந்திருந்தன.

பித்த சம்பந்தமான தேக முடையவர்களுக்கு அதிகாலையில் எழுந்திருக்கும்போது பிரதமத்திலே பித்தநீர் அதிகரித்து ஓர்வித மயக்கமும் தலை நோயும் ஒருவேளை உண்டாகக்கூடும். அதனால் அவர்கள் அதைரியப்படாமல் அடுத்தடுத்து ஏழெட்டு நாள் வரையில் அதிகாலையி லெழுந்துகொண்டே வருவார்களாகில் வெகு சீக்கிரத்தில் அவர்களுடைய பித்தரோகம் அவர்களிடத்தில் சொல்லாமலே தலைகாட்டா தோகுமென்பது சில பிரபல வைத்தியசாத்திரிகள் வற்புறுத்திக் கூறுகின்றார்கள். ஆனால் ஏழெட்டு வயதுக்குட்பட்ட அதி பாலியர்கள் நெடுநேரம் வரையில் தூங்கவேண்டிய அவசிய மிருக்கிறபடியாலும், அவர்கள் தாமே நித்திரை தெளிந்து எழுந்திருக்கிறவரையில் அவர்களை இடையில் எழுப்புவது யுக்தமன்றனபடியாலும் அவர்களை மாலையில் வெகு சீக்கரமாய் உறங்கச்செய்து அதிகாலையில் தாமேயெழுந்திருக்கும்படி பண்ணுவது அதி உசிதமென்று ஓர் சிறந்த பண்டிதர் கூறுகின்றார்.

உலக சரித்திரத்தை வாசித்துப் பார்க்குமிடத்து அதிக மனோ தைரியமும் தேகாரோக்கியமும் விவேக விளக்கமும் பெற்றுச் சுத்த வீரர்களாகவும் சிறந்த வித்வ சிரோன்மணிகளாகவும் மிக்கமதியூகிகளாகவும் இருந்தவர்களுக்குள் அநேகர் தூக்கத்துக்கிடங் கொடாமல் அதிகாலையி லெழுந்திருக்கும் வழக்கத்தை விடா தநுஷ்டித்து வந்தார்களென்று அவரவர்களுடைய வாழ்நாட் சரித்திரங்களால் தெளிவாக விளங்குகிறது.

ஆகையால் தேகாரோக்கியம் பெற்றுத் தமக்கும் பிறர்க்கும் பெரும் பயனை விளைக்கத்தக்க நற்காரியங்களில் பிரவர்த்திக்க மனமுள்ள சற்புருடர்கள் யாவரும் "வைகறைத் துயிலெழு" என்று அம்மையார் கூறிய அமுதவாக்கைக் கடைப்பிடித்து ஒழுகுவாராக.

## ஓர் கதை.

ஒரூரில் தரித்திரப் பிராமணனொருவன் மூன்று தாரமிழந்து சற்றேறக்குறைய அறுபது வயதானபின்பும் ஒரு பிராமணச்சிறுமி அழகிற்சிறந்தவளா யிருந்தமைகண்டு ஆசை மிகுதியால் அவளை விவாகஞ்செய்துகொள்ள நிச்சயித்தான். அப்பெண்ணின் தாய் தந்தையர்கள் சற்றேனும் யோசனையின்றி அக்கிழப்பிராமணனுக்கு அவளை விவாகஞ்செய்து கொடுத்துவிட்டார்கள், அவள் பெயர் பத்மாவதி. அவள் ரூபலாவணியத்தில் அக்காலத்தில் அந்தப் பிரதேசத்திலிருந்த எல்லாப் பெண்களிலும் மிகச்சிறந்தவளா யிருந்தாள். அவளுடைய குணாகுணங்களைக் கண்டறியாமலே அவ்வேழைப் பிராமணன் சமானதிகமற்ற அவளது அழகின் விசேஷத்தால் மதிமயங்கி அவளை விவாகஞ் செய்துகொண்டான். வறுமையின் மிகுதியால் அவ்வந்தணனும் பத்மாவதி என்னும் மனைவியும் துன்பப்பட்டுக்கொண்டிருக்கையில், காசிக்கு யாத்திரை செய்துவந்தால் பற்பல இடங்களுக்கும் சென்று குபேர சம்பத் துடன் வீடு வந்து சேரலாமென்று எண்ணி ஒருநாள், அக்கிழவன் தன் கையிலிருந்த கொஞ்சத் திரவியத்தைத் தன் மனைவியிடத்தில்கொடுத்து தான் கொண்ட கருத்தை தெரிவிக்க, அவள் என் பிராண நாயகா! அப்படியே செய்க என்று கூறிச் செலவுகொடுத்தனுப்பினள்.

பத்மாவதி தன்னுடைய நாயகனது பிரிவாற்றாமையால் மனத்தளர்ச்சி அடைந்து அவன் திரும்பி வரவேண்டியநாளை எண்ணியெண்ணி உயிர்வாழ்ந்துகொண் டிருக்கையில் அவ்வூரரசன் ஒருநா ளவளைக்கண்டு அவளது நிகரற்ற பேரழகினால் மதிமயங்கித் தனக்கு அதற்குமுன்பே மூன்றுநாயகிமாரிருந்தும் அவளை எவ்வகையாலும் விவாகஞ்செய்துகொள்ள வேண்டுமென்னும் ஓர் எண்ணங்கொண்டான் மறுநாள் அரசன் தன் அரண்மனைத் தாதிகளைநோக்கி நீங்க ளெவ்விதத்திலாவது இவ்வூரிலுள்ள ஏழைப்பிராமணனது பத்தினியாகிய பத்மாவதியை எனக்குமணஞ்செய்விக்க வேண்டுமென்று குறையிரந்தான். அவர்களங்ஙனமே பத்மாவதியண்டை வந்து அம்மா! உன் அழகுமுழுவதும் விழலுக்கிறைத்த நீர்போலும், நிர்மானுஷ்யமான காட்டில் புஷ்பித்ததாமரைபோலும், பயனற்றதாய் விடுகின்றதே. இவ்வூரரசனை நீ மணம்புரிவாயாகில் உனக்கு எல்லாச்சம்பத்தும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலாகி நீ இப்பிறவியிலாகிய பெரும்பயனை அடையலாமேயென்று பலவாறாகத் துர்ப்புத்தி கூற, அதைக்கேட்டுப் பத்மாவதி பேதமையால் மனத்தளர்ச்சி யடைந்து அப்படியே யாகட்டுமென்று சம்மதிக்க உடனே அரச னவளைவிவாகஞ்செய்துகொண்டான். அரசன் தன் அரசாட்சிக்குட்பட்ட குடிகள்யாவரும் தனக்குக் குழந்தைகளென்னும் முறையைநாடாமலும், பிறர்மனை விழைதலைப்பற்றிக்கூறியிருக்கும் அடியிற்கண்ட பாசுரத்தைப்போன்ற பிரமாணங்களையறியாமலும், இத்தீக்காரியஞ் செய்தது. அம்மம்ம! கொடிது! கொடிது!! அப்பாசுரமாவது:—

"வம்புலாங் கூந்தன் மனைவியைத்துறந்து பிறர்பொருள் தாரமென்றிவற்றை —நம்பினாரிறந்தா னமன்றமர் பற்றி யெற்றிவைத்தெரிபெழுகின்ற—செம்பினாலியன்ற பாவையைப்பாவி தழுவென மொழிவதற் கஞ்சி-நம்பனே வந்துன் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய்" (வரும்)

# Foreign News.

## பிறதேசவர்த்தமானம்

ஜப்பான்—பனமாவாய்க்காலை ஐக்கியநாட்டார் அரண்செய்துகொள்ளவிட்டால் ஆபத்துக்கிடமாக முடியுமென ஜப்பானிய உத்தியோகத்தரின் அபிப்பிராயம். ஜப்பானிய அரசரைக்கொல்ல முயன்றார்களென, அநேகஜப்பானியர் பிடிக்கப்பட்டார்கள். இத்தேசத்திலே அரசரை தெய்வமெனப் பாவித்து அவரில் அச்சமும் பேரன்பும் விசுவாசமு முடையராய் வாழ்ந்த ஜப்பானியர் இராசதுரோக சிந்தனையுடையராயிருத்தல் மிக ஆச்சரியம், இப்படிப்பட்டசங்கதி இதுவரையில் நடந்திருப்பதாக அத்தேசசரித்திரம் கூறவில்லை.

அபாயம்:—தூத்துக்குடியில்புதிதாகக் கட்டப்படும் ஓர்கட்டடத்தின் 25 அடிஉயரமுள்ள சுவர் சடுதியாக விழுந்ததனால், அங்கு வேலைசெய்துகொண்டு நின்ற 25 கூலிக்காரர் புதைந்து போயினர், இவ்வபாயத்தை அறிந்த நகரசங்க அக்கிராசனரும் பொலிசதிகாரிகளும் அங்கு சென்று முயற்சிசெய்ததில் 19 பேர்கடுங்காயங்களோடு மீட்கப்பட்டனர். எஞ்சிய 6 பேரும் இறந்து போயினர்.

வரியேற்றம்—திருவாங்கூர்த் தரைத்தானத்தார் புல்தரைகளுக்கு இதுவரையில் ஏக்கரொன்றுக்கு 4 அணுவும் ஏனைய நிலங்களுக்கு 12 அணுவும் வரிவிதித்திருந்தனர். இவ்வரியை இச்சென்ற ஆண்டுமுதல் ஏக்கரொன்றுக்கு முறையே 5 அணுவும் 1 ரூபாவுமாக உயர்த்தினர்.

பசுவின் பால்:—பசுமாடுகளைத் தனைப்படுத்தி கறக்கும் பால், அருந்தவார்க்கு வயிற்றுவலி, சருமரோகம், சோர்பு முதலிய குணபேதங்கள் உண்டாகுமென ஒரு வைத்தியர் சொல்லுகிறார்.

தீர்க்க புகைக்குடியன்—சிக்காட்கவினமுன பிரானசிலே ஒருபுகையிலைக்குடியன சுருட்டுக்கடையில் தானே சடுதியில் இறந்தனன். அவனொருநாளில் பெருஞ்சுருட்டாக இருபதுசுருட்டுக் குடித்துவருவானாம். முப்பது வருஷங்களாகஇப்படிநடந்து வந்தமையால், சுருட்டுச்செலவு எவ்வளவாகி இருக்குமெனபதை யோசிக்க வேண்டியது. மிகுந்தபுகைக்குடியால் பொருட்செலவு மாத்திரமல்ல, உயிர்ச்சேதமும் சம்பவிக்கும்.

—✕—

புனுகுமான—இது இமயமலைப் போரத்திலிருக்கும் திபேத் பூட்டான தேசகானகங்களில் வசிக்கினறது. இரண்டரை அடி உயரமுள்ள இம் மிருகம் ஏனைய மானகளைப்போற் கூட்டம்கூட்டமாகத் திரியாமல் ஆணும் பெண்ணுமாயொருமித்துத் தனித்துத் திரியும். இவ்வினத்தின ஆணுக்குக் கடைவாயிலிருந்து வெளியிட்டுக் கீழேநோக்கி இரண்டு தந்தங்கள் வளர்ந்திருக்கினறன. மேற்படி மானிலிருந் தெடுக்கும்வாசனைத்திரவியமே புனுகு எனது சொல்லப்படும்.

—✕—

தொட்டாற் சிணுங்கி:—வியன்னா தேசத்தில் ஓர்வித தொட்டாற்சிணுங்கி வளருகின்றது. ஸ்பரிசித்தவுடனே அது அசைவற்று இலைகளை மூடிக்கொள்கிறது. அதில் பெருங்காற்று மழைக்கும், பூமியதிர்ச்சிக்கும் குறிகள் தெளிவாய்த் தோன்றுகின்றன. எதிர்காலத்து நிகழும், ஆபத்துகளை முன்னறிவிக்குங் கருவிகளாகப் பலவகைப்பூண்டுகளையும் நமக்குத்தந்த கடவுளின் கருணையே கருணை.

## சீனதேசத்தாரின் மரியாதைக் கிரமங்கள்

மௌடீகத்தன்மையுள்ள மிலேச்சர்கள்முதல் நாகரீகத்திற் சிறந்தசாதியாரீறாக அவரவர்கள் தத்தம் தேசாசாரத்துக்கும் மதாசாரத்துக்குமேற்றபடி சிற்சில மரியாதைக் கிரமங்கள் ஏற்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒருசாதியாருடைய மரியாதைக்கிரமங்கள் மற்றொருசாதியாருக்கு அருவருப்பைத் தரத்தக்கனவா யிருத்தல்கூடும். சீனதேசத்தவர்கள் பாராட்டிவரும், மரியாதைக் கிரமங்கள் ஐரோப்பியர்களுக்கு மிகவும் அருவருப்பைத் தரத்தக்கனவா யிருக்கின்றன. அவர்கள் யாரையாவது விருந்துக்கழைப்பதானல் விருந்தாளி தங்கள் வீட்டுக்கு வருவதற்குமுன் குறைந்தது 3-4 முறை அவர்களுக்குக் கடிதமெழுதி தொந்தரை கொடுப்பது வழக்கம்: விருந்தாளிகளுடனே வீட்டுக்காரன பந்தியிலிருந்து போசனஞ்செய்வது வேடிக்கையாகவிருக்கும். ஆயிரம்பேர் உட்கார்ந்திருக்கும்போது அவ்வீட்டுக்காரன் போசனத்தை முதலெடுத்துண்ணும்வரையில் மற்றவர்கள் அவனுடைய வாயையேபார்த்துக்கொண் டிருப்பார்கள். அவ்வெசமான் ஓர் சைகைசெய்து ஒருகவளத்தையெடுத்து வாயிற்போடும்போது மற்றவர்க ளெவ்வாறே கவளத்தை கருங்காலிமரத்தாற் செய்யப்பட்ட அகப்பைபோன்ற ஓர்வகைக் கருவியால் எடுத்து வாயிற்போடுவார்கள். அங்குள்ளவர்களுடைய வாய்கைகள் ஒரேமாதிரி ஒரேயளவாக அசைகினறனவா வென்று அடிக்கடி ஒருவரையொருவர் கவனமாய்ப் பார்த்துக் கொள்வார்கள். ஒருவன் கைமுந்தி ஒருகவளத்தை உட்கொண்டாலும், அல்லது பிந்தி மெதுவாகத்தின்றாலும் அது மிக்க அவமானமாகக் கொள்ளப்படும். ஒவ்வொருசாதியாரும் அவரவர்க்குரிய மரியாதைக் கிரமங்களைத் தவறாது அனுஷ்டித்து வரல்வேண்டு மென்பது அத்தேச அரசாங்க கட்டளை.

தனக்கு மேலான ஒருவனைக் காணும்படி அவன்வீட்டுக்கு மற்றொருவன்வருவானாகில், அவன் வீட்டின் முற்றத்துக்கு வந்தவுடனே இரண்டு வேலைக்காரர் ஒருகுடையையும் விசிறியையும் அவனுக்கு எதிரே சற்றே சாய்த்துப் பிடித்துக்கொண்டு, அவனை அவ்வீட்டுக்காரனிடம் அழைத்துக் கொண்டுபோய் விட்டவுடன், அவ்விரண்டையும் கொண்டுபோய் விடுவார்கள். வீட்டுக்காரன் மேலான ஸ்திதி யுடையவனாக விருப்பின் தான் இருக்குமிடம்விட்டு எழும்புவதில்லை. தாழ்ந்தவனாக விருந்தால் அவன் தெருவில் வரும்போதே எதிர்கொண்டு உள்ளேவரவழைத்துக் கொள்வது வழக்கம். நான் என்று தன்மையிலாவது, நீ என்று முன்னிலையிலாவது மாறிதம் பேசமாட்டார்கள், படர்க்கையிடமாகப் பேசுவதே அவர்களுக்குப் பெருத்த மரியாதை.

கடிதம் எழுதும் முறையும் வெகு தொன்மையுடையது, தக்க ஒருவனுக்குக் கடிதமெழுதவில் ஓர் பெரிய வெள்ளைக் காகிதத்தை எடுத்துப் பத்துப் பன்னிரண்டு மடிப்புகளாக மடித்து அவனுடைய தகுதிக் கேற்றளவு எழுத்துக்களை மிகச்சிறியனவாக எழுதல் வேண்டும், எழுத்துக்கள் சிறுகச்சிறுக மரியாதை அதிகம்.

## நாகையிலிருக்கும் சிவஞானியார் வரலாறு.

இவர் வேதாரணியத்துக்குச் சமீபமாகவுள்ள கருப்பம்புலமென்னுங் கிராமத்தில் அவதரித்தவர். சைவ வேளாள வருணத்தவர். தாய் தந்தையர் இன்றுஞ் சீவந்தரா யிருக்கின்றார்கள். இல்லறதருமம்பூண்டு மனையாளோடு கூடிவாழ்ந்து ஒரு பெண்மகவைப்பெற்றார். மனைவியாரும் மகளும் இருக்கிறார்கள், மகளுக்கு இப்பொழுது விவாகமுமாகிவிட்டது.

இவர் குடும்பத்தி லிருந்து கொண்டே இருபதுவருடகாலமாக ஞானசாஸ்திரங்களை அன்போடு ஓதி அவற்றின் பொருளை உணர்ந்துவந்தார். எப்பொழுதும் வேறொன்றையுங்கவனியாமல் போசனசமயந்தவிர மற்றச்சமயங்களிலெல்லாம் படிப்பதே தொழிலாகவிருந்தார், அந்த ஞானநூலுணர்ச்சி வளர வளர உலகப்பற்றே யில்லாமல் அறவொழிந்தவந்தது. அயலார் இவரிப்படி ஒருமுயற்சியினும் பிரவேசியாமல் ஞானமார்க்கத்திலேயே முயல்வதைக்கண்டு இவரை ஓர் வீண் பைத்தியக்காரரென்றுமதிக்கத்தொடங்கினார்கள். தங்களைப்போல உலகவிஷயங்களில் முழுகி இருக்கவில்லையென்னும் எண்ணமே அப்படிமதிப்பதற்குக் காரணமாம்.

இவரெப்பொழுதும் ஒருவரோடும் பேசாமலும் ஒன்றையுங்கவனியாமலும் தம் அறிவை ஞானநூலாராய்ச்சியிலேயே செலுத்தி மெய்யறிவு வளரப்பெற்றார்.

இப்பொழுது ஐந்துவருடங்களுக்குமுன் வீட்டைவிட்டுப் புறப்பட்டுத் திருப்பெருந்துறைசென்று குருந்தடியிலெழுந்தருளியிருந்து வாதவூரடிகளுக்கு ஞானோபதேசஞ்செய்த குருமூர்த்தியைவணங்கி, எம்பெருமானே! தமியேனுக்குந் திருவருள் பாலித்தருளி ஞானோபதேசஞ் செய்ய வேண்டுமென்று இரந்து பன்னாள் அங்கே தவங்கிடந்தார். எம்பெருமானிவருக்கு எவ்வாறு அருள்புரிந்தனரோ அறிகிலேம். ஞானமுதிர்ச்சி மிகவுடையராய் அங்கிருந்து புறப்பட்டுத் தலயாத்திரை செய்துகொண்டு, திருவாரூரையடைந்து அங்கே சிலகாலந் தங்கினார். அதனபின்பு இரண்டுவருடங்களின்முன் நாகையையடைந்து மௌனநிலை யுடையராய் ஒன்றையும் நோக்காமலும், ஒருவரோடும் பேசாமலும் வீதிகளிலேசஞ்சரித்தார். இவருடைய ஞானநிலையை அறியாத சிறுவர்கள் பித்தரென்று எண்ணிக் கல்லாலெறிந்தும் தடியா லடித்தும் எப்பொழுதும் தூற்றித் திரிவாராயினர். யாரென்னசெய்தாலும் ஒன்றையுங்கவனியாமல் எல்லாவற்றையுஞ் சகித்துக்கொண்டே திரிந்தார். அதைக்கண்ட சில துஷ்டராகிய கொடியோர் எறிந்தாலும், அடித்தாலும், பொறுத்துத் திரிகிறாரே. சுடிட்டாலும் பொறுப்பாரோ வென்று பரிசோதிப்பார்போல, இருப்புக்கோல்களை நெருப்பிற் பழுக்கக்காய்ச்சி உடம்பிலே யெங்குந் தழும்பேறும்படி சுடிட்டு விட்டார்கள். இம்மகாத்மா அவர்கள்செய்தஅக்கொடும்பாதகச்செயலையும் பொறுத்துக்கொண்டார். உடம்பு முழுவதும் அத்தழும்புகள் இன்னுமிருக்கின்றன.

மூடச்சனங்கள் மிகத் தொல்லைப்படுத்தியதனாற்போலும். நாகையி லுள்ள நீலாயதாக்ஷி அம்மையார் ஆலயத்தினுள்ளே புகுந்து பிரகார மண்டபத்திலுள்ள விநாயகர் கோவிலறையுள் நிஷ்டைகூடிச் சிலதின மிருந்தார். இவருடைய மகிமையை யறியாமல் அக்கோவிலெசமானர் இவர் அன்னாகார மின்றி கண்ணைமூடிக்கொண்டு கிடப்பதால் இத்தனைநா ளிப்படி யிருக்குமிவர் இறந்து போவாரோவென்று அஞ்சி, இறந்துவிட்டால் ஆலயத்துக்குப் பிராயச்சித்தஞ் செய்ய வருமேயென்று கருதி, வெளியிலே தூக்கிக்கொண்டுபோய்ப் போட்டுவிட்டார்கள்.

அவர்கள் இரவிலே கோவிற்கதவைப்பூட்டிக்கொண்டு போனபின்பு சுவாமிகள் மறுபடியும் அவ்விடத்திலே போயிருக்க, மறுநாட்காலையில் கதவுதிறந்து பார்த்து இவரைக்கண்டு கோபத்தோடு மறுபடியும் வெளியிலேகொண்டுபோய் விட்டார்கள். சுவாமிகள் அன்றும் பழையபடி கோயிலுள்ளேயே வீற்றிருந்தார்.

பின்பு கோயிற்காரர் பொலீசுக்குத்தெரிவித்துப் பொலீசாரையும் ஒரு டக்டரையும் கொண்டுவந்து காட்டினார்கள். அந்த டக்டர் ஒரு மகமதியர். அவர்சுவாமிகளுடைய கை நாடியையும் உடம்பையும் பரிசோதித்துப் பார்த்து, இவர் நோயாளியல்லவென்றும் நாடியோட்டத்தைப் பார்க்கும் போது இன்னும் நூறு வருடங்களுக்கு மேல் உயிரோடு வாழத்தக்கவராய்க் காணப்படுகிறாரென்றும் இவருடைய தன்மையை நன்றாய் உற்று நோக்கினால் ஒரு மகா யோகியாய்க் காணப்படுகிறாரென்றும், இவரை யாதோர் இம்சையும் செய்யாமல் இந்த இடத்திலேயே வைத்துப் பத்திரமாய்ப் பாதுகாக்க வேண்டுமென்றும் சொல்லிப்போயினர். அதுமுதல் இவரை யொருபெரிய மகாத்துமாவென்று கோவிலாரும் ஊரவர்களும் கருதி வழிபடத் தொடங்கினார்கள், ஓர் அன்பர் சுவாமிகளிருக்குமிடத்தைக் கிருதிகளினால் அடைத்துச் சனங்கள் தொந்தரைசெய்யாதபடி பாதுகாத்தார்.

இப்படி யொரு ஞானி வந்திருக்கின்றாரென்று கேள்வியுற்றவுடன் அளவில்லாத சனங்கள் எப்பொழுதும் வந்து கூட்டங்கூட்டமாய்த் தரிசிக்கத் தொடங்கினார்கள், பிதாவும் மாதாவும் மனைவியும் மகளும் வந்துபார்த்துத் தமக்கு இவர் உதவாத நிலையிலிருப்பதை நினைந்து மனஞ்சலித்துச் சென்றனர்.

சுவாமிகள் ஆகாரமில்லாமலும் எப்பொழுதும் ஆனந்தமான நிட்டையிலேயே அழுந்தி உலக உணர்ச்சியே யில்லாமல் இந்திரிய அந்தக்கரணங்களின் செயலற்று வீற்றிருந்தார். இப்படி ஒன்றரைவருடங்களின்மேற் சென்றன,

கோவிலிலே சனங்களின் சந்தடி அதிகமானமையாற் போலும், சில தினங்களின்முன்னே அவ்வூர் வாசரும் பெருஞ் செல்வரும் மெய்யன்பருமான கணபதியாபிள்ளை குமாரர் இராமசாமிப் பிள்ளை அவர்களுடைய சொப்பனத்திலே சுவாமிகள் தோன்றி உன்னுடைய வங்களாவுக்கு நான் வந்து விடுகிறேன் எனக்கு அங்கே இடந்தா என்று சொல்ல, மறுநாள் விடியற்காலையில் இராமசாமிப்பிள்ளை அவர்கள் சுவாமிகள் முன்பு போய்த் தாம்கண்ட கனவைக் கூறிச் சுவாமிகள் அங்கு வருதல் சம்மதமோவென்று கேட்டார். அப்போது சம்மதக்குறியாகச் சுவாமிகள் தலையசைக்க ஆனந்தத்தோடு சுவாமிகளைக் கையினாற் பிடித்துத் தூக்க சுவாமிகள் எழுந்து அவரோடு உடன்சென்றனர். இராமசாமிப்பிள்ளை சுவாமிகளைத் தம் குதிரைவண்டியிலேற்றிக் கொண்டுபோய்த் தம் வங்களாவில் வைத்திருக்கிறார்.

இவர் ஓர் பெரும் மகா ஞானியாகக் காணப்படுகின்றார். இவருடைய பூரண நிட்டையின் நிலை இத்துணைத்தென்று அளவிட்டுச் சொல்லுந் தரத்தன்று.

மகா சிவஞானிகள் இருந்தாரென்ற கதையை நாம் புராணங்கள் வாயிலாகவே கேட்டிருக்கோம், இப்பொழுது நம்முடைய கண்ணினாலேயே இந்தச்சிவஞானியைத் தரிசிக்கும்படியான மகா பாக்கியம் நமக்கு வாய்த்தது. நாம் அவரைத் தரிசித்தபோது நம்முடைய இந்தச் சென்மமும் பயனுடையதேயாம் என்னும் எண்ண முண்டாயிற்று; என்றிவ்வாறு சுவாமிகளை நேரிற் றரிசனஞ்செய்த ஸ்ரீமத் வித்வான் தாமோதரம்பிள்ளை அவர்கள் தமது "ஞானசித்தி,, என்னும் பத்திரிகையில் எழுதியிருக்கின்றார்


## விளம்பரம்.

### யாழ்ப்பாணம் கடையிற் சுவாமிகள் திருவுருப்படம்.

யாழ்ப்பாணத்திலே ஏறக்குறைய 32 வருடங்களாக வசித்து அரும் பெரும் அற்புதங்கள் பலவற்றைச் செய்து சமாதிகூடிய இம் மகானுடைய திருவுருப்படம் அங்கிலேய இயந்திரசாலையில் மிக அழகாக அச்சிடப்பட்டிருக்கின்றது. மட்டைசேர்த்துக் கண்ணாடியிட்டு வைத்துக்கொள்ளுதற்கேற்ற தக்க பிரமாண முடையது. விலை பிரதியொன்றுக்கு சதம் 25 பிறவூரவர்களுக்கு வி. பி. மூலமாகவும் அனுப்பப்படும். தவாற் செலவு பிரத்தியேகம். வேண்டுவோர் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**செ. வேலாயுதன்.**

42-கன்னாரவீதி.
கொழும்பு.


## கடிதங்கள்.

### ஓர் முறையீடு.

"பால சந்திரனே" என மகுடம் புனைந்த குழந்தாய்!

நீ இவ்வாரத்தில் வெளிப்பட்டு எம் நாட்டின காரிருளைக் கடிந்து நிலவொளிபரப்பி வருவாயெனபதை அறிந்து மிக மகிழ்வடைந்தேன். கருணாகராகிய பரமர் சடாமகுடத்தைநிலையிடமாகக் கொண்ட உனமழலைச்சொற்களை இந்நிலவுலகோர் உனனைக் கைத்தலத் தேந்தி முத்தமிட்டுச் சீராட்டிச் செவியுறக்கேட்டுக்களிகூர்ந்து, காலந்தோறும் அடையும்இனபமே காரணமாகப் பெருமைபெறுவரெனபதில் ஐயமெனனோ?

ஆகவே என அகத்துக்கிடக்கும் சில குறைகளை நினவாயிலாக முறையிடத்துணிந்த எனக்குமிடந்தந்து அக்குறைகளைப்படிப்படி பரிகரித்து வரும் வழிவகைகளைத் தேடும்படி உனனை வேண்டுகினறேன.

பால!

தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் எனனும் மூன்று சங்கங்களாலும், பினசமய குரவர் நால்வராலும் எம் தென்னாட்டில் இனிது வளர்க்கப்பட்ட தேனமொழியாகிய தமிழ், நாளடைவிற் போற்றுவாரினறித் தனனுருவம்மாறத் தலைப்பட்டது. இத்தென்னாட்டில் தற்காலத்தும் பண்டிதசிரோமணிகள் பலர் இருக்கின்றார்களெனபதை நான் மறுக்கவில்லை. அவர்களால் நடைபெறும் தமிழ்ப் பத்திரிகைகளும் எழுதி வெளிப்படுத்தப்படும் தமிழ் புத்தகங்களும் பலவே. இவை பெரும்பாலும் ஆங்கிலம் முதலிய பிற பாஷைச் சொற்களையே பெரும்பாலுங் கலந்து எழுதப்பட்டு வருதலைக் காண்பது எவ்வளவு வெட்கம்! எத்துணைப்பரிதாபம்!!

தென்னாடெங்கும் பிற்காலத்துப் பெருங்கீர்த்திபடைத்த சபாப்பிரசிங்க சிங்கமும் அதுல்ய வித்வ சூடாமணியுமாகிய ஆறுமுகநாவலர் அவர்களால் எம் ஈழநாடு செந்தமிழ் நாடெனப் பலராலும் பாராட்டப்படநேர்ந்தது சத்தியமே. அங்ஙனமாகவும் எம் நாட்டாருட் சிலரும் சீவனோபாய பாஷையாகிய ஆங்கிலச் சொற்களையே தமிழொடு கலந்து பாவிக்கத் தலைப்பட்டனர். அந்தோ! இதுவோனரே! எம் தாய்ப் பாஷையாகிய அத்தமிழை முற்றாய்க் கைவிட்டாரும் பலர், தம் பெயரை எழுதவறியாரையும் காணுவேமாயின எம்பாஷையடைந்த பரிதாபநிலைமையைக் குறித்துப் பேசுவதெனனோ? வேறு சிலர் தம் நாமத்தைத் தமிழிலும் தம் தந்தைபெயரின முதலெழுத்தை ஆங்கில எழுத்திலும் குறித்துவரும் வழக்கம் துர் வழக்கமனறோ?

ஆரம்பத்திலேயே பாலனாகிய நினமேல் பெரும்பாரத்தை ஏற்றல் முறையனறாதலால் என குறைகளிலொனறை ஈண்டுச் சுருக்கித் தந்தேன. எம்பாஷை தன சுயவடிவோடு வளர்ந்தோங்கும்வழியைப் பெரிதும் நாடி வருதல் உனபெருங்கடனாக இருக்குமென நம்புகினறேன.

இங்ஙனம்,
செ. வே.

கொழும்பு.

## தமிழ்.

—✕—

தமிழ் ஆரிய மொழி போலத் தொன்மையுடையதொரு தெய்வ மொழியாம், சிவபெருமான் சிருட்டியாரம்பத்தில் அம்பிகைக்கு ஆரியமும் தமிழும் ஒருங்கு நல்கி அறிவுறுத்தருளினர் என்பது திரு மந்திர நூற்பொருள். தமிழ் என்னும் சொல் இனிமைப் பண்புணர்த்தும். அது "தமிழ் தழிய சாயலவர்,, என்னும் சிந்தாமணியினாலும் இதற்கு "இனிமைதழுவிய சாயலவர்,, என நச்சினார்க்கினியார் உரைத்த பொருளினாலும் பிற வழக்கினாலும் தெளிக:-குணகடல் குமரி குடகம் வேங்கட மென்னும் நான்கெல்லையின் உடையதாகிய நாட்டிலே ஆதிதொட்டு வழங்கிவருகின்ற பாஷையே தமிழ் எனப்படும்,

பிரயோக விவேக நூலாரும் வேறு சிலரும் திரமிளமென்னும் ஆரியச்சொல் தமிழ் எனத்திரிந்ததென்று கொண்டார். முதன்மைபெற்ற இம்மொழியைத்தோற்றிய காலத்து இறைவன் தன்சொல்லால் இதனை வழங்க இதற்குக் குறியீடு தருதலன்றிப் பிறபாஷைச் சொல்லால் இதற்கு அவ்வாறோர் பெயரினைத் திரித்துக் கொடுத்திலனென்றல் பொருந்தாது. அன்றியும் இனிமைப் பொருளுணர்த்தும் தமிழ் என்னும் பண்புச்சொல் தன் சொல்லாய் நிலைபெறுவதாக, அதனை விலக்கி வேறுவகையாகக் கோடலேனோ? சிலர், இவ்வளவில்லாத் தமிழ்க்கனி இலக்கண முத னூலாகிய அகத்தியம் வடமொழிப் பாணினீய வியாகரணவழித்தோன்றியதென்று பெரிதும் முரண்படக்கூறுகின்றனர். அவ்வகத்தியமுதனூல் வழித் தோன்றிய தொல்காப்பியமே யாக அதற்குமுதனூல் வடமொழி ஐந்திரவியாகரண மென்றும் மாறுபடக் கூறுகின்றனர், இதற்குக்காரணம் அன்னோர் ஆரிய பாஷையிற் கொண்ட அபிமானமேயாம்,

"இருமொழிக்கு முதற்குரவர் கண்ணுதலாரியல் வாய்ப்ப - விருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர்,, என்றபடி, தமிழ் மொழி ஆதிக்கண்ணே பரமாசாரியராகிய கண்ணுதற் பிரானாற் றோற்றமுற்று நிலைபெறுந் தொன்மொழியென்பதும், அகத்தியனார் அம்மொழிக்கு இலக்கண முதனூல் செய்தருளிய பேராசிரியர் என்பதும் அணிபு.

"தமிழ் என்னுஞ் சொல் திரமிளம் என்னும் வடமொழிச் சிதைவு என்றுகூறிப்போயினார் ஆசிரியர் சிலர், அது பொருத்தமுடையதன்று. பெயரிட்டு வழங்காத பொருளாட்சி எக்காலத்தும் எவ்விடத்தும் எச் சாதியாரிடத்தும் இல்லதோராட்சியாம். அவ்வக் நாட்டிலுள்ளார் தாம் வழங்கும் பாஷைக்குத் தாமொரு பெயரிடாது வழங்கார். தமது நாட்டிலில்லாத ஒன்றை அது பிறந்த நாட்டில் வழங்கும் பெயரினாலேயே வழங்குவர். ஆதலின் "திரமிளம்,, என்னுஞ்சொல் தமிழ் என்னுஞ் சொல்லினது திரிபாமயன்றி, திரமிளம் என்னுஞ்சொல் தமிழ்எனச்சிதைந்ததாகாது. தெலுங்கு என்னும் பாஷைப்பெயரைத் திரிலிங்கமென்பது வடமொழி வழக்கு. வெண்ணெய் நல்லூரை வேண்ணு நல்லூரமென்பது வடமொழி: வழக்கு என்பது லகாந்தபுராணத்திற் காண்க. தெலுங்கு, வெண்ணெய் நல்லூர் என்னுஞ் சொற்களை உள்ளவாறு எழுதுதலும் வழங்கலும் வடமொழி உச்சாரண ரீதிக்கு அமையா. அதுபற்றியே வடமொழியில் அவை திரிலிங்கமெனவும் வேண்ணு நல்லூரமெனவும் வழங்கப்பட்டன. அவ்வாறே தமிழென்னுஞ் சொல்லும் வடமொழியிலுள்ளவாறு வழங்கலாகாமைகண்டு திரமிள மென்றாக்கி வழக்கப்படுவதாயிற்று.,,

ஆரியம் 'சமஸ்கிருதம், என்று இருமொழித் தொடரால் பெயர் பெறுதல் போலத் தமிழும் தென் மொழியென்று இருமொழித் தொடரினால் பெயர் பெறும், தென்மொழி அழகுடையபாஷை. அன்றியும் தென்மொழி யென்பதற்கு இசையுடைய மொழியென்று பொருள் கூறினும் பொருந்தும். அஃது இயல்பாக இயைந்து மொழியோடு தோற்றும் மெல்லோசை இன்பமாம். அவ்வோசை இன்பம் இதற்குப்போல ஏனைய பாஷைகளுக்கு அத்தனை வாய்ப்பாயப் பொருந்தாமை செவிப்புல அனுபவத்தினாற் கண்டு தெளிக.

தென்மொழி என்புழி தென் னென்பது வடமொழி யென்பதன்கண் வட வென்பதுபோல திசைகுறிக்குஞ் சொல் என்றும், அது வடமொழிக்கு அழகு இசையெனப் பொருளுரைத்தல் பொருந்தாதென்று சிலர் சாதிப்பர். ஆரியமொழி வட நாட்டின் கண்ணின்று தென்னாட்டின் கண் வந்து வழங்குதலின், தென்னாட்டாராகிய தமிழ் மாந்தர் அதனை வடமொழியென்று அங்ஙனம் திசையடுத்து விசேடித்தல் வழக்காம். தென்னாட்டினர் தமிழ் எல்லைக்குளிருந்து கொண்டு அதனைத் தென்மொழியென்று திசையடுத்து அங்ஙனம் விசேடித்தல் வேண்டாமையின் அது வழங்காகாது. ஆகவே தென் என்பது திசைப்பொருள் குறித்து வந்த அடை மொழியன்று; அழகு இசை என்பன குறித்து வந்த அடைமொழியேயாம்.

தென்னாடு "தமிழ் நாடு,, என்பது தொன்றுதொட்டு வழங்கும். அதனகட்டமிழ் மொழிக்கு முற்பட்டு வழங்கிய பாஷைகள் ஒன்றுமில்லை, இதுவே தொல்லோராகிய தமிழ் நல்லாசிரியர்களின் துணிபுரை. நமக்கு அன்னரல்லாராய் இலக்கிய இலக்கண வரலாறெனத் தாம் தாம் மனம்போந்தவாறு குளறுபாடாகக்கூறும் இக்காலத்துப் பண்டிதர் கொள்கை வேண்டற்பாலதன்று.

இங்ஙனம்
ஓர் தமிழன்.

வாழிய வாழிய மன்னவர் செங்கோல்
வாழிய வாழிய மாதவர் சங்கம்
வாழிய வாழிய மாவுல கெல்லாம்
வாழிய மாநிலம் வாலறிதானே.

Printed and Published by M. V. Ponnampalapillai, at the "Kuga Dasa" Press, No. 103 Chekku Street, Colombo.